வேண்டும். அந்தப் பகுதியில் உரத்தை உபயோகிக்காததற்குக் காரணம் காலாகாலத்தில் மழை இல்லாமையினால்தானே தவிர, கனம் அங்கத்தினர் சொல்லுவது போல் உரத் தட்டுப்பாடினால் அல்ல.

Liberalisation of abortions.

*273 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether the State Government has been consulted by the Union Government on the question of liberalisation of abortions ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கருச் சிதைவைச் சட்ட பூர்வமாக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஆதரிக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது கருச் சிதைவை சட்ட பூர்வமாக ஆக்கப்படுமா என்ற கேள்வி அல்ல. கருச் சிதைவைச் செய்வதற்கு மருத்துவ மனையில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளனவா என்பது கேள்வி. இதைப் பற்றி ஏற்கெனவே குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்து சென்னையில் ஃபாமிலி ப்ளானிங் கவுன்சில் ஆலோசனைப்படி சாந்திலால் கமிட்டி மூலம் பரிசிலனை செய்து அந்தக் கமிட்டியினர் சில காரணங்களை முன்னிட்டு பெண்களின் உடலுக்கும், உயிருக்கும் எந்தவித ஊறும் ஏற்படாத வகையில், சிந்தாகூலமுடைய பெண்கள் கருவுற்றிருந்தாலும், 16 வயதுக்குட்பட்ட பெண்கள் கருவுற்றிருந்தாலும் எந்த விதமான கோளாறும் ஏற்படாத வகையில் அந்தக் கருவைச் சிதைப்பதற்கு மருத்துவ சிகிச்சை அளிக்கலாம் என்ற முடிவை எடுத்திருந்தார்கள். ஆனால் டைரக்டர் ஆப் ஹெல்த் சர்விசஸ் அண்டு பாமிலி பிளானிங் நமது மாநிலத்தில் இருக்கிற நிபுணர்களான டாக்டர் எ. எல். முதலியார், எம். கே. கே. மேனன் ஆகியோரைக் கலந்து ஆலோசித்ததில் அவர்கள் சம்மதிக்கவில்லை. ஆனாலும் இதை அவசியம் என்று உணர்ந்து இதை ஏற்றுக் கொள்ளும் முறையினால் மேற்கூறிய வகையில் எந்த விதக் குந்தகமும் ஏற்படாத வகையில் சில நல்ல காரணங்களை முன்னிட்டு குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்து சட்டப்படி தவறு இல்லாத அளவுக்கு முன் வருவார்களானால் அவர்களுக்குக் கருச் சிதைவைச் செய்யலாம் என்று பல நிபந்தனைகளோடு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

Public Buildings (Licensing) Act.

*274. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the details of the establishment set up to enforce the Madras Public Buildings (Licensing) Act ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கெனவேயுள்ள அரசாங்கப் பணியாளர்கள் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தற்போதைக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். சென்னை, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்களது தனி உதவியாளர்களும், வருவாய்க்கோட்ட அதிகாரிகள் அனைவரும், (தனிப் பொறுப்பு வகிக்கும் எல்லாத் துணைத் தாசில்தார்களும் உட்பட) எல்லாத் தாசில்தார்களும் இச்சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குவதற்குத் தகுதியுள்ள அதிகாரிகளென இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த பப்ளிக பில்டிங்ஸ் லைசென்ஸிங் என்ற சட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 2, 3 லட்சம் சிறு வியாபாரிகள், கடை வைத்திருப்பவர்கள் இதன் கீழ் வரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலும் பல வியாபாரிகள் இந்த அரசாங்கத்திடம் முறையிட்டு

மூன்று ஆண்டுகள் தள்ளுபடி செய்யவேண்டுமென்று டெலிகிராம் அனிப்பிய காரணத்தாலும் இந்த அரசாங்கம் குறைகளைக் கவனித்து மீண்டும் மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்க முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது 31-3-1969 வரையில் கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேதிக்குள்ளாக அவர்கள் தங்களது மனுக்களைத் தர வேண்டும். அவற்றை பரிசிலனை செய்து அவசியப்பட்டால் காலவரையறை நீடிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Since this Act is an all-pervading one which applies to all public institutions and buildings and whereas the request of the petty stall holders to postpone the Act for a few years could not be met, will the Government think of the possibility of exempting these small shop-keepers and small establishments from the purview of this Act. ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விதிவிலக்குத் தருவதற்குச் செயற்குறிப்பு எதுவும் இல்லை. அவ்வப்போது அவர்கள் புதுப்பித்துக் கொள்ளலாம். காலவரையறையை நீடிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாத சுவாமி தேவஸ்தானம்

*265. வினா.—**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாதஸ்வாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருத்துறைப்பூண்டி சன்னதி தெருவில் உள்ள மனையையும் அதில் அமைந்துள்ள வீட்டையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யாமலும், மனையையும் வீட்டையும் ரூ. 25,000-க்கு மேல் ஒருவர் எடுத்துக் கொள்ள முன் வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியதைப் புறக்கணித்தும் மேற்படி வீட்டில் குடியிருக்கும் ஒருவருக்கு ரூ. 14,000-க்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், விற்பனையை ரத்து செய்து பகிரங்க ஏலத்தில் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இப்போது இல்லாவிட்டாலும் உடனடியாக அதை ரத்து செய்து சரியாகப் பணம் கிடைக்கக்கூடிய அளவில் அந்த இடத்தை விற்க அரசு துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்த மனையை வாங்கியவர் 1927-ம் ஆண்டிலிருந்து அங்கு குடியிருந்து வருகிறார். அந்த வீட்டுக்காக ஏற்கெனவே அவர் கிட்டத்தட்ட 13,000 ரூபாய் வரை செலவு செய்திருக்கிற காரணத்தாலும், அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தாலும் அந்த வீட்டை அவரிடமே விற்றால்தான் இலாபம் இருக்கிறது என்ற காரணத்தாலும்தான் விற்கப்பட்டது.

திரு. கே. என். குமாரசாமி : அதிகமான விலைக்கு ஏலத்தில் எடுக்க பலர் தயாராக இருந்தும் அவருக்கே விற்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : குடியிருந்த அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தால்தான் அவரிடமே விற்கப்பட்டது.